


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில்,
மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ், விபத்தில் மரணமடைந்த நான்கு மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ. 2 இலட்சத்திற்கான காசோலைகளை,
மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (19.08.2016) நடைபெற்ற மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.
தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 548 /2016 நாள்: 19.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின்கீழ், 4 மீனவர் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலைகளை மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (19.08.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (19.08.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மீனவ மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டத்தில் கடந்த மாதத்தில் மீனவ மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து துறைவாரியான பதில்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. இதில் பிற துறையை சார்ந்த 62 மனுக்களும், மீன்வளத்துறையை சார்ந்த 23 மனுக்களும், தனிநபர் மனுக்கள் 62 என மொத்தம் 147 மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டத்தின்கீழ்,

ஏழுதேசம் சி கிராமம், சின்னத்துறையை சார்ந்த திரு. அ. சிலுவையன் என்பவர் 02.09.2015 அன்று கடலில் மூழ்கி மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. ஜார்ஜ் மேரி, நீரோடி, கொல்லங்கோடு அஞ்சல் என்ற இடத்தை சார்ந்த திரு. பி. ஜாண்சன் என்பவர் 07.04.2015 அன்று கொல்லங்கோடு அருகே இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது நாய் குறுக்கே பாய்ந்ததில் நிலைதடுமாறி விழுந்து மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. சீற்றம்மாள், கோடிமுனை என்ற இடத்தை சார்ந்த திரு. பி.கஸ்பார் என்பவர் 23.02.2015 அன்று கடலில் மூழ்கி மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. சிறியபுஷ்பம், துறைமுக தெரு, குளச்சல் என்ற இடத்தை சார்ந்த திரு. லா. புரூனோ நிக்சன் என்பவர் 20.01.2015 அன்று கடலில் மூழ்கி மரணமடைந்தார். அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. புளோரின் சத்யா ஆகியோர்களுக்கு தலா ரூ. 2 இலட்சத்துக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில் இன்று (19.08.2016) வழங்கினார்.

எஸ்.எஸ்.எஸ் முட்டம் பேரூந்து தற்போது 6 நடைகள் முட்டம் மற்றும் 4 நடைகள் குளச்சல் இயக்கப்பட்டு வருகிறது. குளச்சல் சென்று வரும் நடைகள் நேர் சாலையிலும் செயல்படுகிறது. இந்த நடைகளை கேட்கப்பட்டவாறு மாற்றும் போது பயன்பெறுவோர் பாதிப்படைவர். மேலும், பரிட்சார்த்த முறையில் இயக்கப்பட்ட முட்டம் - திற்பரப்பு பேரூந்து பயணி பயன்பாடு இல்லாமையால் மாற்றப்பட்டது எனவும், குளச்சல் - திருவனந்தபுரம் மற்றும் கன்னியாகுமரி - திருவனந்தபுரம் தடங்களில் ஏற்கெனவே பேரூந்துகள் இயக்கப்படுகின்றன. கேட்கப்பட்டவாறு கடலோர பகுதி வழியாக புது தடங்கள் ஏற்படுத்தும் கருத்துரு தற்சமயம் இல்லை எனவும், இணையம்புத்தன்துறை ஊராட்சி பகுதியில் கிராம நிர்வாக அலுவலகம் அமைப்பது வருவாய் துறையின் பணியாகும். கருங்கல் பேரூராட்சிக்குட்பட்ட ஆரோக்கியநகர் பகுதியில் கணேசபுரம் செல்லும் பாதையில் பேவர் பிளாக் அமைக்க வரும் மன்ற கூட்டத்தில் பொருள் சேர்க்கப்பட்டுள்ளது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன், பேரூராட்சியின்

பொதுநிதி இருப்பை பொறுத்து, மேற்படி பணி மேற்கொள்ளப்படும் எனவும், சைமன்காலனி ஊராட்சி, பாலப்பள்ளம், ரீத்தாபுரம் பேரூராட்சிகளின் கீழ்வரும் குறும்பனை கிராமத்தை ஒரே பஞ்சாயத்தாக அறிவிக்க அரசால் உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை எனவும், தமிழ்நாடு அரசு மூலம் செயல்படுத்தப்படும் இலவச வீடு கட்டும் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுவது தொடர்பான ஆலோசனை கூட்டம், அனைத்து உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க தலைவர்களுக்கும் நடத்தப்பட்டு, திட்டத்திற்குரிய விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது எனவும், இணையம் புத்தன்துறையை சார்ந்த திரு. அம்புறோஸ், திருமதி. ரெஞ்சிதம் ஆகியோர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் எனவும், இணையம், ஆழித்துறையை சார்ந்த திருமதி. பொ. புஷ்பராணி என்பவருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் எனவும், இணையம்புத்தன்துறை சார்ந்த திருமதி. அல்போன்ஸ் என்பவருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மீனவர் மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், உதவி இயக்குநர் திரு. எஸ். ரூபர்ட் ஜோதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.